



# நீங்கள் ஆங்கிலம் கற்க எங்களால் உதவ முடியும்

## வயதுவந்த குடிபெயர்வாளருக்கான ஆங்கில மொழித் திட்டம்

### நான் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

இப்போது நீங்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளீர்கள். ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வது உங்களுக்கு முக்கியமாகும்.

ஆங்கிலம் ஆஸ்திரேலியாவின் தேசிய மொழியாகும். ஆஸ்திரேலியாவிலுள்ள மக்கள் பல மொழிகளைப் பேசுகிறார்கள். ஆனால் ஆஸ்திரேலிய வாழ்வில் முழுதாகப் பங்கெடுத்துக்கொள்ள, நீங்கள் ஆங்கிலத்தை பேசவும், புரிந்துகொள்ளவும் வேண்டும். ஆங்கிலம் இல்லாமல், ஒரு வேலையைப் பெறவும், பிறர் ஆதரவைச் சாராத நிலை உண்டாகவும் நீங்கள் சிரமத்தைக் காணுவீர்கள். நீங்கள் ஒரு ஆஸ்திரேலியக் குடிமகனாக மாற விரும்பினால் ஆங்கிலம் தேவைப்படும்.

### வயதுவந்த குடிபெயர்வாளருக்கான ஆங்கில மொழித் திட்டம் என்றால் என்ன?

AMEP என்றும் அழைக்கப்படும் இந்தத் திட்டமானது தகுதியுள்ள வயதுவந்த குடிபெயர்வாளர்கள் மற்றும் அகதிகள் ஆஸ்திரேலியாவில் வெற்றிகரமாகக் குடியேறுவதற்கு உதவுவதற்கான அடிப்படைப் பயிற்சியை ஆங்கில மொழியில் வழங்குகிறது.

AMEP ஆனது உங்களுக்கு ஆங்கிலத்தை மட்டுமன்றி, பிறவற்றையும் கற்பிக்கும். நீங்கள் ஆஸ்திரேலிய சமூகம், பண்பாடு மற்றும் சம்பிரதாயங்கள் பற்றியும் கூடக் கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் மற்ற புதிய வருகையாளர்களைச் சந்திப்பீர்கள். அவர்கள் ஒரே மாதிரியான அனுபவங்களையும் உங்களைப் போன்ற நோக்கங்களையும் கொண்டிருக்கக்கூடும். நீங்கள் பெரும்பாலும் பல புதிய நண்பர்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது.

AMEP ஆனது ஆஸ்திரேலிய அரசாங்கம் நிதியுதவி செய்த ஒரு திட்டமாகும்.

### இத்திட்டத்துக்கு நான் தகுதியுள்ளவரா?

நீங்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறுகின்ற ஒரு குடிபெயர்வாளராகவோ அல்லது அகதியாகவோ இருந்தால் மற்றும் ஒரு நிரந்த நுழையுரிமை வழங்கப்பட்டிருந்தால் மற்றும் நீங்கள் சிறிதளவு ஆங்கிலம் பேசுபவராகவோ அல்லது பேச இயலாதவராக இருந்தால், நீங்கள் தகுதியுள்ளவர் ஆகக்கூடும். தற்காலிக நுழையுரிமைகளைக் கொண்டுள்ள சில குடிபெயர்வாளர்களும் கூட இத்திட்டத்தில் இணைய தகுதியுள்ளவர் ஆகக்கூடும். மேலும் 15 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட சில இளைஞர்களும்கூட இத்திட்டத்தில் இணையக் கூடியவர்களாக இருக்கக்கூடும்.

நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு வந்தடைந்து அல்லது நிரந்தர வசிப்பிடத்தைப் பெற்று ஆறு மாதங்களுக்குள் ஏதேனும் ஒரு AMEP சேவை வழங்குநர்களிடம் நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும், நீங்கள் ஒரு ஆண்டுக்குள் ஆங்கில வகுப்புகளைத் தொடங்க வேண்டும்.

உங்களுடைய நுழையுரிமையின் தொடக்கத் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு 510 மணிநேர ஆங்கிலப் பயிற்சித் திட்டங்கள் வரை அல்லது செயற்பாட்டு ஆங்கிலத்தை அடைவதற்கு எடுத்துக்கொள்கின்ற மணிநேரங்கள் வரை (எது முன்னர் வருகிறதோ அது வரைக்கும்) AMEP இல் நீங்கள் ஆங்கிலத்தைக் கற்கலாம்.

குடிபெயர்வுக்கு முன்னதான கடினமான அனுபவங்கள் (எடுத்துக்காட்டாக சித்திரவதை மற்றும் பேரதிர்ச்சி) அல்லது குறைவான பாடசாலைக்கல்வி காரணமாக உங்களுக்குச் சிறப்புத் தேவைகள் இருந்தால் கூடுதல் பயிற்சிக்கு நீங்கள் தகுதியாகக் கூடும்.

கூடுதலாக, பணிவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கு குடியேற்ற மொழிப் பாதைகள் (SLPET) திட்டம் ஊடாக AMEP வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் பயிற்சி கிடைக்கிறது. வாடிக்கையாளர்கள் ஆஸ்திரேலியப் பணியிடப் பண்பாடு மற்றும் வழக்கங்களுடன் நெருங்கிய நட்பைப் பெறும் வேளையில் தொழில் சார்ந்த குறிப்பான ஆங்கிலத்தைக் கற்க அவர்களுக்கு உதவுவதற்கு பணிவாய்ப்பு ஒருமுகப்படுத்தப்பட்ட பயிற்சி திட்டத்தை SLPET வழங்குகிறது.

### இத்திட்டத்தின் செலவு என்னவாக இருக்கும்?

இத்திட்டத்தின் ஊடாகக் கற்பதற்குத் தகுதியான பெரும்பாலான நபர்களுக்கு செலவு எதுவும் இல்லை.

### எனக்குக் கற்பிக்க உள்ளவர் யார்?

சேவை வழங்குநர்கள் என்று அழைக்கப்படுகின்ற உள்ளூர் நிறுவனங்கள் AMEP பயிற்சியை வழங்குகின்றன. இந்தச் சேவை வழங்குநர்கள், ஆங்கிலத்தைக் கற்பிப்பதில் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களை பிற மொழிகளைப் பேசுகின்றவர்களுக்காக பணிக்கு அமர்த்துகின்றனர்.

உங்கள் உள்ளூர் சேவை வழங்குநர் நீங்கள் இத்திட்டத்துக்குத் தகுதியானவரா இல்லையா என்பதைக் கூறுவார். அவர்கள் ஆங்கிலம் கற்பதற்கான மிகச்சிறந்த வழியை உங்களுக்குப் பரிந்துரைக்கலாம்.

குடும்ப அல்லது பணிக் காரணங்களுக்காகத் தேவைப்பட்டால், உங்கள் வகுப்புகளின் தொடக்கத்தை தாமதப்படுத்துவதற்கு உங்களுக்கான அனுமதியை அவர்கள் கோரலாம்.

உங்கள் தேவைகளுக்கு எந்தப் பயிற்சி திட்டம் மிகச் சிறப்பாகப் பொருந்தும் என்று உங்கள் சேவை வழங்குநர் ஆலோசனை வழங்குவார். உங்கள் பணி மற்றும் குடும்ப நிலைமைகள் மற்றும் உங்கள் ஆங்கிலத்தின் தற்போதைய நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இதைச் செய்வார்கள். மேற்கொண்டு கல்வி கற்பதற்கான திட்டத்துக்கும் அவர்கள் உங்களுக்கு உதவலாம்.

## நான் ஆங்கிலம் கற்கையில் எனது குழந்தைகளை யார் பராமரிப்பார்கள்?

நீங்கள் வகுப்பில் கலந்துகொள்கையில் உங்கள் குழந்தைகளுக்கான இலவச குழந்தைப் பராமரிப்பை உங்கள் AMEP சேவை வழங்குநரால் ஏற்பாடு செய்ய முடியும். இலவச குழந்தைப் பராமரிப்பானது பாடசாலை செல்லும் வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளுக்காக, நீங்கள் வகுப்பில் கலந்து கொள்ளும் நேரத்தில் மட்டுமே வழங்கப்படும்.

கூடுதல் தகவல்களுக்கு குழந்தைப் பராமரிப்பு விடயத் தாளை உங்கள் AMEP மையத்திடம் கேட்கவும்.

## நான் எங்கே கற்பேன்?

சேவை வழங்குநர்கள் வேறுபட்ட நேரங்களில் (வார நாட்கள், மாலை நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்கள்), பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்ற சமூக மையங்கள் உள்ளிட்ட வேறுபட்ட இடங்களில் முழு-நேர மற்றும் பகுதி-நேரப் பயிற்சி திட்டங்களை வழங்குகிறார்கள்.

சேவை வழங்குநர்கள் கிராமங்களிலும் மற்றும் பிராந்தியப் பகுதிகளிலும் அத்துடன் முக்கிய நகரங்களிலும்கூட பயிற்சி திட்டங்களை அளிக்கிறார்கள்.

## என்னால் வகுப்புகளில் கலந்துகொள்ள இயலவில்லை என்றால் என்ன செய்வது?

### தொலைதூரக் கற்றல்

AMEP ஒரு தொலைதூரக் கற்றல் திட்டத்தைக் கொண்டுள்ளது. உங்கள் AMEP சேவை வழங்குநர் இந்தப் பயிற்சி திட்டம் குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் ஆலோசனையை உங்களுக்கு வழங்க முடியும்.

இத்திட்டம் இணையம் வழியாக அல்லது தொடர்ச்சியான உரைகள் மற்றும் கேட்பொலிகாட்சிப் பொருட்கள் ஆகியவற்றின் தொகுப்பு மூலமாக வழங்கப்படுகிறது. மேலும் இது புத்தகங்கள் மற்றும் கேட்பொலிகாட்சிப் பொருட்கள் ஆகியவற்றின் பயனையும் உள்ளடக்குகிறது. நீங்கள் தகுதிவாய்ந்த ஒரு ஆசிரியருடன் தொலைபேசி வழியான ஒழுங்கான தொடர்பையும் பெறுவீர்கள். நீங்கள் பயிற்சி திட்டத்தில் ஒரு வாரத்துக்கு குறைந்தது ஐந்து மணிநேரங்களைச் செலவு செய்ய வேண்டும்.

பயிற்சிகளும், செயற்பாடுகளும் வானொலி கேட்டல், செய்திப்பத்திரிகைகள் மற்றும் விளம்பரங்களைப் படித்தல், உங்களைப் பற்றிப் பேசுதல், தகவல்களைக் கேட்டல், படிவங்களை நிரப்புதல் மற்றும் கடிதங்களை எழுதுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

### வீட்டில் பாடம் கற்பிப்பவர் திட்டம்

நீங்கள் AMEP க்கு தகுதி பெற்றவராக இருந்து, வகுப்புகளில் கலந்துகொள்ள இயலாதவராக இருந்தால், நீங்கள் வீட்டில் பாடம் கற்பிப்பவருடன் இணைந்து பயிலலாம்.

ஆங்கிலத்தைக் கற்பதற்கான மிகச் சிறந்த வழியை வீட்டில் பாடம் கற்பிப்பவர் உங்களுடன் கலந்துரையாடி, ஆஸ்திரேலியாவிலுள்ள தினசரி வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ முடியும்.

உங்கள் AMEP சேவை வழங்குநர் இந்தத் திட்டம் பற்றிய கூடுதல் தகவலையும் ஆலோசனையையும் வழங்க முடியும்.

## AMEP வகுப்புகளைத் தொடங்கும் முன்னர்

AMEP வகுப்புகளைத் தொடங்கும் முன்னர், பின்வருவனவற்றுக்காக உங்கள் AMEP மையத்துடன் நீங்கள் ஒரு சந்திப்பு முன்பதிவை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

- உங்கள் ஆங்கிலத்தின் நிலையை மதிப்பிடுவதற்கு
- ஒவ்வொரு வாரமும் நீங்கள் படிக்கும் மணிநேர எண்ணிக்கை குறித்தும், நீங்கள் கலந்துகொள்ளும் வகுப்பின் வகை குறித்தும் ஒப்புக் கொள்வதற்கு
- குழந்தைப் பராமரிப்புத் தேவைகள் குறித்தும் உங்களுக்கு உதவுவதற்கு AMEP மையம் என்ன செய்யலாம் என்பது குறித்தும் கலந்துரையாடுவதற்கு
- உங்கள் கல்வி மற்றும் தொழில் இலக்குகளை அமைக்கும் ஒரு தனிநபர் வழி வழிகாட்டியையும், இவற்றை அடைவதற்கு நீங்கள் செய்யவேண்டியது மற்றும் கற்கவேண்டியது என்ன என்பதையும் மேம்படுத்துவதற்கு. உங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி உங்கள் முன்னேற்றமானது நீங்கள் கூடுதல் ஆங்கிலத்தைப் படிக்கும்போது உங்கள் திட்டத்தில் பதிவு செய்யப்படும்.

## கூடுதல் தகவல்கள்

கூடுதல் தகவல்களுக்கு, 131 881 என்ற எண்ணில் குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறை விசாரணை தொலைபேசி எண்ணை (ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும் உள்ளூர் அழைப்புக்கான கட்டணத்தில்) நீங்கள் அழைக்கலாம்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள சேவை வழங்குநர் உள்ளடங்கலான AMEP பற்றிய தகவல்களை www.immi.gov.au/amep வலைத்தளத்தில் காணலாம்.

உங்களுக்கு உரைபெயர்ப்புச் சேவை உதவி தேவையெனில், 131 450 என்ற எண்ணில் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS) தேசியத்தை (ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும் உள்ளூர் அழைப்புக்கான கட்டணத்தில்) தொடர்பு கொள்ளலாம். அவர்கள் வாரத்தின் ஏழு நாட்களும், நாளின் 24 மணிநேரங்களும் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை வழங்குகிறார்கள்.